

நெல்லை மாவட்டம் இராதாபுரம் வட்டம் கூடன்குளம் புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளியில் 01.11.2025 அன்று நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமினை சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு, மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார் தலைமையில் மாவட்ட ஊராட்சி தலைவர் ஜெகதீஸ் முன்னிலையில் துவக்கி வைத்து தூய்மை பணியாளர்களுக்கு நலவாரிய அட்டைகளை வழங்கினார்.



வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி நேற்று (03.11.2025) சென்னை ராஜாஜி சாலையில் உள்ள பதிவுத்துறை அலுவலக கூட்டரங்கில் 25 நபர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவி உயர்வு ஆணைகள் மற்றும் பணியின் போது உயிரிழந்த பதிவுத்துறை அலுவலரின் வாரிசுதாரருக்கு பணி நியமன ஆணை வழங்கினார். வணிகவரி மற்றும் பதிவுத்துறை அரசு செயலாளர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# கூடங்குளத்தில் ‘நலம் காக்கும் ஸ்டாலின்’ சிறப்பு மருத்துவ முகாம்!

## சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்!

நெல்லை,நவ.4-

நெல்லை மாவட்டம் கூடங்குளத்தில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமினை சட்டபேரவைத் தலைவர் மு.அப்பாவு பார்வையிட்டு ஆய்வு செய்து திருநெல்வேலி மாவட்டம், நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் இரண்டாம் கட்டமாக 3ம் முகாம் இராதாபுரம் வட்டாரம் கூடங்குளம் புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளியில் 01.11.2025 அன்று நடைபெற்ற முகாமினை சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு மாவட்ட ஆட்சியர் மரு. இரா.சுகுமார் தலைமையில்,மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் முன்னிலையில் துவக்கி வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் சட்ட பேரவைத் தலைவர் மு.அப்பாவு தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில் பல்வேறு எண்ணற்ற திட்டங்களை கொண்டு வந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்” திட்டத்தினை கடந்த 02.08.2025 அன்று தொடங்கி வைத்தார்கள்.

அதன் ஒரு பகுதியாக, திருநெல்வேலி மாவட்டத்தில், முதல் கட்டமாக 10 நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்களில் 24,346 நபர்கள் கலந்து கொண்டு உடல் பரிசோதனை செய்து கொண்டனர். இப்பரிசோதனைகளில் நபர்களுக்கு தீவிர நோய்கள் கண்டறியப்பட்டு உயர்சிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்பட்டு, உயர்சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, இரண்டாம் கட்டமாக “நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்” சேரன்மகாதேவி வட்டாரம், வீரவநல்லூர் புனித ஜான்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும், களக்காடு வட்டாரம் டோனாவூர் வாக்கர் மேல்நிலைப் பள்ளியிலும் நடைபெற்றது.இம்முகாமில் 3023 நபர்கள் கலந்து கொண்டு உடல் பரிசோதனை செய்து கொண்டனர். இப்பரிசோதனைகளில் 15 நபர்களுக்கு தீவிர நோய்கள் கண்டறியப்பட்டு உயர்சிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்பட்டு, உயர்சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் 131 கர்ப்பிணி தாய்மார்களுக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இன்றையதினம் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் மூன்றாவது முகாமாக இராதாபுரம் வட்டாரம் கூடன்குளம் புனித அன்னாள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது.இம்முகாமில் அடிப்படை சிகிச்சை மற்றும் உயர்நிலை மருத்துவப் பரிசோதனைகளுடன் முழுமையான உடல் பரிசோதனைகளும் (உயர் இரத்த அழுத்தம்,நீரிழிவு நோய், மின் இதய வரைபடம், எக்கோ, அல்ட்ராசவுண்ட் ஸ்கேன்,எக்ஸ்ரே மற்றும் முழுமையான இரத்தப் பரிசோதனை,காசநோய் மற்றும் தொழுநோய் கண்டறிதல் பரிசோதனைகளும், ஆரம்ப கட்ட புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள் போன்ற அனைத்து பரிசோதனைகளும் கண்டறியப்படும்) மேலும் பொது மருத்துவம், அறுவை சிகிச்சை, இதயவியல், மகப்பேறு மருத்துவம் எலும்பு மற்றும் நரம்பியல், மனநலம், நுரையீரல்,தோல் நோய்,காது மூக்கு தொண்டை மருத்துவம்,கண் மருத்துவம்,பல் மருத்துவம்,ஆயுஷ் மற்றும் இயன்முறை சிகிச்சை போன்ற 17 வகையான சிறப்பு மருத்துவம் வழங்கப்படுகிறது.

கூடங்குளம் அரசு மருத்துவ மனையில் டயாலிஸிஸ் சிகிச்சை மேற்கொள்வதற்கு தினமும் 20 ஆயிரம் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது.என மருத்துவ நிர்வாகம் கேட்டுள்ளனர். அதற்காக குழாய் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் கூடங்குளம் அரசு மருத்துவமனைக்கு தினந்தோறும் 20 ஆயிரம் லிட்டர் சுத்தமான தண்ணீர் கிடைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கூடங்குளம் அனுமின் நிலையம் கட்டுவதற்கு நிலம் கொடுத்தவர்கள் வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என கேட்டுள்ளனர்.தற்போது முதற்கட்டமாக 20 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் கூடங்குளம் அனுமின் நிர்வாகத்தினரிடம் கலந்து ஆலோசித்து நிலம் கொடுத்த மீதமுள்ளவர்களுக்கு டி பிரிவில் வேலை வாய்ப்பு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இராதாபுரம் கால்வாயில் தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமில் அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் சிறப்பபான மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.அனைத்து தரப்பு மக்களும் இம்முகாமில் கலந்து கொண்டு பயன் பெற வேண்டும்.

இவ்வாறு சட்டப்பேரவைத்தலைவர் மு.அப்பாவு கேட்டுக் கொண்டார் .

மேலும்,08.11.2025 அன்று திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட மேலப்பாளையம் முஸ்லீம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி யிலும், 15.11.2025 அன்று வள்ளியூர் வட்டாரம் பணகுடி திருஇருதய மேல்நிலைப் பள்ளியிலும், 22.11.2025 அன்று அம்பாசமுத்திரம் வட்டாரம் அகஸ்தியர்பட்டி கேம்ப்ரிட்ஜ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும், 29.11.2025 அன்று மானூர் வட்டாரம் கங்கைகொண்டான் நம்ம ஊரு குளோபல் பள்ளியிலும், 06.12.2025 அன்று பாப்பாக்குடி வட்டாரம் நடுக்கல்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியிலும், 13.12.2025 அன்று பாளையங்கோட்டை வட்டாரம் சங்கர்நகர் ஜெயந்திரா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும், 20.12.2025 அன்று நாங்குநேரி வட்டாரம் தளபதிசமுத்திரம் அரசு மேல்நிலை பள்ளியிலும் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

நடைபெற்ற மருத்துவ முகாமில், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.விஜய சந்திரன், இணை இயக்குனர் மருத்துவ பணிகள் மரு. லதா, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஜான்சிரூபா, ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர்கள் அரியமுத்தரசன், நடராஜன், மாவட்ட வட்டார மருத்துவ அலுவலர் மரு.ஆட்ளின் ஷேரியா, கூடங்குளம் ஊராட்சி மன்றத்தலைவர் பிரின்சி வட்டார சுகாதார மேற்பார்வையாளர் ராமசாமி, மருத்துவர்கள், செவிலியர்கள், சுகாதார பணியாளர்கள், தன்னார்வலர்கள் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### சேலம் மாநகராட்சிப் பகுதிகளில்

# ரூ.37.03 கோடியில் சாலை மேம்பாட்டு பணிகள்!

## அமைச்சர் இரா. இராஜேந்திரன் தொடங்கி வைத்தார்!

சேலம்,நவ.4-

சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் ரூ.37.03 கோடி மதிப்பீட்டிலான சாலை மேம்பாட்டுப்பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தா தேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (02.11.2025) தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அரசின் அனைத்து திட்டங்களையும் அனைத்து தரப்பு மக்களுக்கும் கொண்டு சேர்ப்பதில் முனைப்புடன் செயலாற்றி வருகிறார்கள். குறிப்பாக பொதுமக்களுக்குத்தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், சாலை வசதிகள், கழிவுநீர் கால்வாய்கள் அமைத்திடவும், நியாயவிலைக்கடை கள், தெருவிளக்குகள், பொது பயன்பாட்டு கட்டடங்கள் உள்ளிட்டவற்றின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் தேவையான நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் இன்றையதினம் சேலம் மாநகராட்சிப் பகுதிகளில் தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.12.95 கோடி மதிப்பீடில் 141 சாலை மேம்பாட்டு பணிகள் 27.139 கி.மீ நீளத்திற்கும், மாநில நிதிக்குழு மானியத்தில் ரூ.11.56 கோடி மதிப்பீட்டில் 114 சாலை மேம்பாட்டு பணிகள் 15.51 கி.மீ நீளத்திற்கும், சிறப்பு நிதி திட்டத்தின் கீழ் ரூ.12.52 கோடி மதிப்பீட்டில் 135 சாலை மேம்பாட்டு பணிகள் 20.97 கி.மீ நீளத்திற்கும் என மொத்தம் ரூ.37.03 கோடி மதிப்பீட்டில், 63.63 கி.மீ நீள 390 சாலை மேம்பாட்டுப்பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இன்றையதினம் தொடங்கி வைக்க ப்பட்ட அனைத்து பணிகளையும் உரிய கால அளவில் முடித்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சேலம் மாநகராட்சி ஆணையாளர் மா.இளங்கோவன், சேலம் மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, அஸ்தம்பட்டி மண்டல குழு தலைவர் திருமதி உமாராணி, மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### வாக்குரிமையை குறி வைக்கும் தேர்தல் ஆணையத்திற்கு புத்தி புகட்ட வேண்டும்!

# அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்து எடுத்திருக்கும் நடவடிக்கை வரவேற்கத் தக்கது!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, நவ. 4–

“வாக்குரிமையை குறி வைக்கும் தேர்தல் ஆணையத்திற்கு புத்தி புகட்ட வேண்டும். அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்து எடுத்திருக்கும் நடவடிக்கை வரவேற்கத் தக்கது” என்று தினகரன் நாளேடு தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

இதுகுறித்து 3.11.2025 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:–

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் நாளை முதல் மேற்கொள்ளப்பட உள்ளது. வாக்காளர் பட்டியிலில் தீவிர திருத்த பணிகள் என்ற பெயரில் ஒன்றிய அரசு, தேர்தல் ஆணையத்தை கையில் வைத்து கொண்டு பீகாரில் பல்வேறு நாடகங்களை அரங்கேற்றியது. இதை ராகுல்காந்தி அப்பட்டமாக வெளிகொண்டு வந்து, வாக்கு திருடர்களை அடையாளப்படுத்தி பிரமாண்ட பேரணியும் நடத்திக் காட்டினார். பீகாரில் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் நிலையில், அதைப்பற்றி கிஞ்சித்தும் கவலைப்படாமல், இப்போது தமிழ்நாட்டிலும் அத்தகைய நாடகங்ளை அரங்கேற்ற தேர்தல் ஆணையம் முன்வந்து விட்டது.



தினகரன்

நவம்பர் 3, 2025 திங்கட்கிழமை

திருத்தம் தேவையா?

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் நாளை முதல் மேற்கொள்ளப்பட உள்ளது. வாக்காளர் பட்டியிலில் தீவிர திருத்த பணிகள் என்ற பெயரில் ஒன்றிய அரசு, தேர்தல் ஆணையத்தை கையில் வைத்து கொண்டு பீகாரில் பல்வேறு நாடகங்களை அரங்கேற்றியது. இதை ராகுல்காந்தி அப்பட்டமாக வெளிகொண்டு வந்து, வாக்கு திருடர்களை அடையாளப்படுத்தி பிரமாண்ட பேரணியும் நடத்திக்காட்டினார். பீகாரில் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும் நிலையில், அதைப்பற்றி கிஞ்சித்தும் கவலைப்படாமல், இப்போது தமிழ் நாட்டிலும் அத்தகைய நாடகங்ளை அரங்கேற்ற தேர்தல் ஆணையம் முன்வந்துவிட்டது.

சமீபகாலமாக தேர்தல் ஆணையத்தில் வாக்காளர் சரி பார்ப்புகளில் எவ்வித வெளிப்படைத்தன்மையும் இல்லை. அதே சமயம் வாக்காளர்களை விதிமுறைகள் என்கிற அடிப்படையில் குழப்பி, சிறுபான்மை வாக்குகளையும், தமிழ்நாட்டில் ஆளும் தரப்புக்கான ஆதரவு வாக்குகளையும் மெல்ல மெல்ல நீக்கிவிடுவதில் தேர்தல் ஆணையம் கவனம் செலுத்தும் என்கிற சந்தேகம் எழுகிறது. குறிப்பாக ஆதார் அட்டையை 12வது ஆவணமாக சேர்க்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டும், தேர்தல் ஆணையம் அதற்கு சில நிபந்தனைகளை விதித்து போக்கு காட்டுகிறது. வாக்காளர் பிறந்த தேதி குறித்த ஆவணங்களை வாக்குப்பதிவு அதிகாரி கேட்கும்போது அளிக்க வேண்டும் போன்ற அறிவிப்புகள், தேர்தல் ஆணையத்திற்கு சாதகமான அம்சங்களாகும். பிறந்த தேதியை குறிப்பிட்ட காலத்தில் அவர் அளிக்கவில்லை என்பதை காரணம் காட்டி ஒருவரது வாக்குரிமையை பறித்துவிட முடியும்.

இது மட்டுமின்றி வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தத்திற்கு இது சரியான காலமாக தென்படவில்லை. தமிழ்நாட்டை பொறுத்தவரை நவம்பர், டிசம்பர் மழைக்காலங்களாகும். இக்காலக்கட்டத்தில் விவசாயிகள் வேளாண் பணிகளை தீவிரமாக மேற்கொள்வர். அதை தொடர்ந்து ஜனவரி மாதம் புத்தாண்டு மற்றும் பொங்கல் பண்டிகைகள் வருகின்றன. இக்காலக்கட்டத்தில் திருத்த பணிகளை மேற்கொள்ள அரசு ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டால், வெள்ள பாதிப்பு உள்ளிட்ட பணிகளை வருவாய்துறையினர் மேற்கொள்ள முடியாமல் போகும் சூழல் உள்ளது. வாக்காளர் பட்டியல்களை திருத்தவும், புதியதாக தயாரிக்கவும் போதிய கால அவகாசம் இல்லாதபோது, பலரை நீக்கவும், புதியதாக சேர விரும்புவோரை இணைக்க முடியாமலும் போகும்.

தேர்தல் ஆணையம் அறிவிக்கும் சிறப்பு தீவிர வாக்காளர் சீராய்வு ஒருவகையில் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையை பறிக்கும் மறைமுக திட்டமாக பார்க்கப்படுகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தமிழ்நாட்டில் நேற்று தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அனைத்து கட்சி கூட்டம் நடந்தது. இதில் காங்கிரஸ், கம்யூனிஸ்டுகள் உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட கட்சியினர் கலந்து கொண்டு, சட்டவிரோத வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கு எதிராக குரல் கொடுத்துள்ளனர்.

இக்கூட்டத்தில் வாக்காளர் பட்டியல் சீராய்வை நிறுத்தாவிட்டால் தேர்தல் ஆணையம் மீது சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடுப்பது என முடிவெடுக்கப்பட்டிருப்பது வரவேற்க வேண்டிய விஷயம். கடந்த சில ஆண்டுகளாகவே தமிழகத்திற்கு அநீதி இழைக்கப்படும்போதெல்லாம், மாநில அரசு சுப்ரீம் கோர்ட்டின் படியேறி வெற்றி கண்டிருக்கிறது. தமிழக மக்களின் வாக்குரிமையை குறி வைத்து தாக்குதல் நடத்தும் தேர்தல் ஆணையத்திற்கு ஏதாவது ஒரு வகையில் புத்தி புகட்ட வேண்டும். அதற்கு அனைத்து கட்சிகளும் ஒருங்கிணைந்து எடுத்திருக்கும் நடவடிக்கை வரவேற்கத்தக்கது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மின் கட்டண உயர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம்!

## புதுச்சேரி இரா.சிவா எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

புதுச்சேரி, நவ. 4-

புதுச்சேரி மாநிலத்தை ஆளும் மக்கள் விரோத என்.ஆர்.காங்கிரஸ் - பாரதிய ஜனதா கூட்டணி அரசு மின் கட்டணத்தை உயர்த்தி பொதுமக்களை வஞ்சித்துள்ளதை கண்டித்து, இந்தியா கூட்டணி கட்சிகள் சார்பில் இன்று (04.11.2025 செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணிக்கு மிஷன் வீதி புனித ஜென்மராக்கினி தேவாலயத்தில் இருந்து ஊர்வலமாகச் சென்று தலைமைச் செயலகத்தை முற்றுகையிடும் போராட்டம் நடைபெற உள்ளது.



மக்கள் பிரச்சினைக்காக நடைபெறும் இந்த போராட்டத்தில் புதுச்சேரி மாநில தி.மு.க. நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்ட மன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் தவறாமல் பங்கேற்று போராட்டம் வெற்றி பெற உதவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு புதுச்சேரி மாநில தி.மு.கழக அமைப்பாளர் இரா. சிவா, எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

### தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

## மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

### சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி – மாவட்டச் செயலாளர்/ பொறுப்பாளர் ஒப்புதலோடு திருப்பூர் தெற்கு, விழுப்புரம் தெற்கு ஆகிய மாவட்ட தி.மு.க. சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் தெற்கு மாவட்டம்

தலைவர் – ஜெ. நவாஸ் 55, விஜயகணபதி நகர், சூளேஸ்வரன்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி – 642006, திருப்பூர் மாவட்டம்.

துணைத் தலைவர் – எஸ். சையது ஹக்கீம் 3/107, மின் நகர், உடுமலை சாலை, மாக்கினாம்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி - 642003, திருப்பூர் மாவட்டம்.

அமைப்பாளர் - வி.என். ஷாஜகான் 115, செல்லமுத்து வீதி, உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் – 1) அ. அபிபுர்ரஹ்மான் 1/82, பள்ளிவாசல் வீதி, சோழமாதேவி அஞ்சல், மடத்துக்குளம் - 642113, திருப்பூர் மாவட்டம். 2) அ. ஹீமாயூன் 79எ, பள்ளிவாசல் வீதி, உடுமலைப்பேட்டை – 642126, திருப்பூர் மாவட்டம். 3) எஸ். முகமது இஸ்மாயில் 43, கோசா வீதி, கணியூர் அஞ்சல், மடத்துக்குளம் – 642203, திருப்பூர் மாவட்டம். 4) டி. கிதியன் சுரேஷ் 5, என்.ஜி.ஜி.ஒ. குடியிருப்பு, சூளேஸ்வரன்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி - 642006, திருப்பூர் மாவட்டம். 5) நா. மாலிக்கராஜ் 3/388, தி திரட் பார்க், குடிமங்கலம், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம் – 642201. 6) ஏ. ராபர்ட் அம்மே கவுண்டனூர், கஞ்சம்பட்டி அஞ்சல் – 642003, பொள்ளாச்சி, திருப்பூர் மாவட்டம்.

### விழுப்புரம் தெற்கு மாவட்டம்

தலைவர் - எம்.எஸ்.கே. அக்பர் 226, காமராஜர் நகர், அரகண்டநல்லூர், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். துணைத் தலைவர் - அ. அந்தோணி 81, வடக்கு தெற்கு தெரு, செ. புதூர், மூட்டத்தூர் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். அமைப்பாளர் - பிரேமா அல்போன்ஸ் ஆற்காடு மெயின் ரோடு, ஆயந்தூர் மற்றும் அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். துணை அமைப்பாளர்கள் - 1) எம். விக்டர் பவுல்ராஜ் 1-114, மாதா கோவில் தெரு, முகையூர் மற்றும் அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 2) கே. பவுல்ராஜ் ஒதியத்தூர் மற்றும் அஞ்சல், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 3) ஆ. அஞ்சலீனா பிள்ளையார் கோவில் தெரு, செல்லங்குப்பம், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 4) த. அருண்குமார் டவி தெரு, நங்காத்தூர், விழுப்புரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 5) ப. பிராங்கினின் பெட் மாதா கோவில் தெரு, ஒட்டன்காடுவெட்டி, மாம்பழுப்பட்டு மற்றும் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை – 18
நாள்: 01–11–2025.

டாக்டர் அ.சுபேர்கான்
செயலாளர்,
தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு




கந்திலி ஒன்றியம், ஆதியூர் ஊராட்சி பஞ்சனம்பட்டி பகுதியில் ரூ.14 லட்சம் மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வளர்ச்சி திட்டத்தின் வாயிலாக கட்டி முடிக்கப்பட்ட அங்கன்வாடி கட்டிடத்தினை அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் கந்திலி மத்திய ஒன்றிய செயலாளர் கே.எ.குணசேகரன், ஊராட்சிமன்ற துணைத் தலைவர் எ.பி.பழனிவேல், ஒன்றிய நிர்வாகிகள் மாது, பி.ஆர்.சின்னபையன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



விளாத்திகுளம் வட்டம், பூதலப்புரம் கிராமத்தில் தொடக்க வேளாண்மை கடன் சங்கம் பன்முக சேவை திட்டத்தின் கீழ் ரூ.17.89 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள விற்பனை மையை கட்டிடத்தினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் திறந்து வைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், மும்மூர்த்தி சின்னமாரிமுத்து, இம்மானுவேல் வடக்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் ஆகாஷ்பாண்டியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.